**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

*****

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar | |
| Miscellaneous | Case No. of |
| Preliminary Register | |
| Sessions | |

| | |
|---|---|
| | Prosecution |
| Deposition of witness for | Defence |
| | Court |

| | |
|---|---|
| Name | : |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2019 .

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT NO.II, ERODE**

**STC.NO.554/2017**

**Deposition of Witness for:** எத **சா 1** முதல் விசாரணை

**Date: 10.10.2019**

**Name:திரு.மல்லிகா க/பெ. செங்கோட்டையன்**

நான் இவ்வழக்கில் 2ம் எதிரியாவேன். நான் வேம்பட்டி தாளத்தில் குடியிருக்கிறேன். சங்ககிரி, மேகாட்டில் உள்ள ராமசாமி என்பவரிடம் தறியை நானும் என் கணவரும் ஓட்டி வந்தோம். ராமசாமியிடம் முன் பணமாக ரூ.25,000/-, ரூ.50,000/- ரூ.55,000/-, மற்றும் ரூ.2000/- என மொத்தம் ரூ.1,32,000/- முன்பணமாக வாங்கினோம். அதன் பிறகு எனக்கு 2017 ம் ஆண்டு 7 வது மாதம் உடம்பு சரியில்லாமல் போனது. அதற்காக ஆப்ரேஷன் செய்தார்கள். என்னை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு என் கணவர் வீட்டிற்கு வந்தபோது பணத்தை அக்கவுண்ட்டில் போடுவதாக சொல்லி பல பேப்பர்களில் கையெழுத்தினை ராமசாமி வாங்கினார். நான் தறிக்கு சென்றபோது என்னிடமும் அவ்வாறு கையெழுத்து வாங்கினார்கள். அக்கையெழுத்தை பயன்படுத்தி நான் மருத்துவமனையில் இருந்தபோது ஏன் தறிக்கு வரவில்லை என சொல்லி எங்கள் இருவர் மீது வழக்கு தாக்கல் செய்து விட்டார்கள். நாங்கள் இருவரும் படிப்பு அறிவு இல்லாததால் கையெழுத்து போட்டு விட்டோம். நானும் என் கணவரும் தலா ரூ. 4000/- என ஒரு வாரத்திற்கு தறி ஓட்டுவோம். அதில் எனக்கும் என் கணவருக்கும் தலா ரூ. 1500/- ஐ ராமசாமி பிடித்தம் செய்து கொள்வார். நான் மருத்துவமனையில் இருந்தபோது ஏன் தறிக்கு வரவில்லை என ராமசாமி என் கணவரை அடித்துவிட்டார். பணத்தை திருப்பி தர சொல்லியும் இல்லையேல் தறிக்கு வர சொல்லியும் என் கணவரை மிரட்டினார்கள். நாங்கள் அப்பணத்தை திருப்பி செலுத்திவிட்டோம். எங்களை மீண்டும் மீண்டும் தறிக்கு வரசொல்லி மிரட்டுகிறார்கள். தறிக்கு வரவில்லை என்றால் கேஸ் போட்டுவிடுவோம் என சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். தங்கவேல் யார் என்றே எங்களுக்கு தெரியாது. ராமசாமியிடம் தான் நாங்கள் தறி ஓட்டி வந்தோம். எங்களுக்கு தெரிந்த நபர்களிடமும் இவ்வாறுதான் காசை வாங்கி கொண்டு அவர்கள் மீதும் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எங்களுக்கு

செக் என்றால் என்ன என்றே தெரியாது.  எங்களிடம் தெரியாமல் கையெழுத்தை வாங்கி கொண்டு இந்த கேசை போட்டுள்ளார்கள்.

குறுக்குவிசாரணை - இல்லை